
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 10 அக்டோபர் 2011

தனிப் பிரதி ரூ. 8/-




## 14 வது வேதாகம கருத்தரங்கம்

### கருத்தரங்கில் தேவசெய்தி அளித்த கருத்தாளர்கள்


Bro. Ravichandran



Bro. Bhasker



Bro. Philip


Bro. Pandian


Bro. Daniel Dorairajan


Bro. Arunachalam


Bro. Thaniarasu


Bro. Yesalan


Bro. James Rajkumar

## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

❄ வரும் 2012–ம் ஆண்டிலும் திருமறை ஆசான் இதழை பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து பத்திரிக்கை நிறுத்தப்படும்.

❄ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.

❄ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........ 1
2. தேவனிடத்தில் விசுவாசம் ........ 9
3. பெண்கள் பகுதி ........ 12
4. நிழலும், நிஜமும் ........ 15
5. வாலிபர் பகுதி ........ 18
6. சிறுவர் பகுதி ........ 20
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 22
8. துருவின் சாட்சி ........ 27
9. நீ அங்கே கன்மலையில் நில்லு ........ 30



**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்**

**-Advanced Bible Correspondence Course-**

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப் படுத்தப்பட்ட 100 **பாடங்கள்** அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**இயக்குனர்**
**அஞ்சல்வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம்–638 701.
தமிழ்நாடு, இந்தியா.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 OCTOBER - 2011 Issue - 10


ஆசிரியர் உரை

## " பந்தயப் பொருளுக்காக.. "

**போ**துவாகவே, தான் ஆசைப்பட்ட ஒன்றை அல்லது தான் விரும்பின ஒன்றை எப்படியாவது பிடித்து விட வேண்டும், எதை யாவது செய்து அடைந்து விட வேண்டும் அல்லது என்ன விலை கொடுத்தாகிலும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று எல்லோருமே எண்ணுவர். இத்தனைக்கும் அப்படி ஆசைப்பட்டவைகளும், விரும்பப்பட்டவைகளும் ஒருவரிடம் வந்து சேர்ந்த பிறகு, அது கை நழுவியோ அல்லது கை மாறியோ போகும் அல்லது குறிப்பிட்ட காலம் வாழ்ந்து நம்மை விட்டுப் பிரிந்தோ அல்லது மறைந்தோ போகும். இப்படி நிலையற்றவைகளாகவும், நிச்சய மற்றவைகளாகவும் இருப்பவைகளை, அதற்காக ஆசைப்படும் அல்லது விருப்பப்படும் எல்லோரும் பெற்றுக் கொள்ளு கிறார்களா என்று பார்த்தால், அதற்கும் "ஆம்" என்று திட்டமாகச் சொல்ல முடியாத நிலையே காணப்படுகிறது. எப்படியெனில், ஒரு சாராருக்கு அவை கைகூடி வருவதாகவும், இன்னொரு சாராருக்கு அவை கானல் நீராக மாறி விடுகிறதாகவுமே உள்ளது. இப்படி விரும்பின அல்லது ஆசைப்பட்ட ஒன்றை எல்லோராலும் அடைய முடியாமல், பிடிக்க முடியாமல், பெற்றுக் கொள்ள முடியாமல் போவதற்குக் காரணம் அல்லது காரணங்கள் என்று சிலவற்றை நாம் கூற முடிந்தாலும், அவைகளில் பிரதானமாக நாம் ஒன்றைக் குறிப்பிட முடியும். அது " போதுமான முயற்சிகள் செய்யப்படவில்லை " என்பதே.

சரி, இப்படி சரீரப் பிரகாரமான இப்பூமியின் வாழ்க்கையில், ஒன்றைப் பிடித்துக் கொள்வதற்கோ அல்லது அடைவதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கோ முயற்சி தேவை என்பது எப்படி உண்மையாயிருக்கிறதோ அதே உண்மை ஆவிக்குரிய வாழ்விற்கும் அப்படியே பொருந்துகிறதாக உள்ளது. இதைத் தான் அப்போஸ்தலன் பவுலடியார் தன்னால் நேசிக்கப்பட்ட பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு ஆவியானவர் துணையால் நிருபம் எழுதினபோது வெளிப்படுத்தியுள்ளார். " நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, "அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப் பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் " (பிலி. 3:12,14) என்று.

இந்த பிலிப்பி பட்டணத்து சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தை அவர்களிடமிருந்து வரப்பெற்றவைகளுக்கான ஓர் நன்றிக் கடிதம் என்றும், அவர்களுடைய விசுவாச நிலையை மெச்சி எழுதப்பட்ட ஒரு பாராட்டுக் கடிதம் என்றும், இன்னும், கர்த்தருடைய ராஜ்ஜியத்தில் தொடர்ந்து உண்மையுள்ளவர்களாயிருங்கள் என்று எழுதப்பட்ட ஓர் ஊக்கக் கடிதம் என்றும் கூறலாம். பவுலடியாரின் இரண்டாவது நற்செய்திப் பயணத்தில் ஆரம்பமான இந்த சபையைப் போன்று வேறு எந்த சபையும் அவருக்கு மகிழ்ச்சி யையும், மனநிறைவையும் ஊழியத்தின் பாதையில் தந்ததில்லை.

இப்படிப்பட்ட ஓர் அருமையான சபையாருக்கு எழுதும் போது தான், தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருள் பற்றிப் பவுலடியார் பேசுகிறார். பந்தயப் பொருள் பற்றிப் பேசுவதற்கு முன்பாக, 12-ம் வசனத்தில், " நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி... என்று கூறி தான் ஒரு நாளில் இயேசுவால் பிடிக்கப்பட்டதை நினைவு கூருகிறார். அப்படியானால், பவுலடியார் எப்பொழுது பிடிக்கப்பட்டார்? அப்போஸ்தலர் 9-ம் அதிகாரத்தின் முற்பகுதியில் நாம் இதைப் படிக்க முடியும். ஆம், எருசலேமில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கொடுமைகளை அரங்கேற்றி விட்டு, அதே வேகத்தில் தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கிச் சீறிச் சென்றபோது இயேசுவால் சந்திக்கப்பட்டு தலைகுப்புறத் தள்ளப்பட்டு பிடிக்கப்பட்டான். இதை பவுலடியார் தன் வாழ்நாளில் ஒருபோதும் மறக்கவேயில்லை.

இந்தப் பரம தரிசனத்தை நினைவுபடுத்திக் கொண்டுதான் அடுத்த இரண்டு வசனங்களில் பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காகத் தான் என்ன செய்கிறேன் என்று கூறுகிறார். பிலி. 3:13,14 ஆகிய வசனங்களில், ஒரு மூன்று காரியங்களை பந்த யப் பொருளுக்காகச் செய்வதாக எடுத்துரைக்கிறார். 1. பின்னா னவைகளை மறக்கிறேன், 2. முன்னானவைகளை நாடுகிறேன். 3. இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்று.

பிலிப்பியருக்கு எழுதும் போது, பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்று கூறும் இந்தப் பவுலடியார், தன் பூமிக்குரிய வாழ்க்கையின் இறுதி கட்டத்தில், விசுவாசத்தில் தான் பெற்ற உத்தமக் குமாரர்களில் ஒருவனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, " நல்ல போராட் டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று பெருமிதம் கொள்கிறார் (II தீமோ. 4:7). " தொடருகிறேன்" என்றவர் இங்கே "முடித்தேன்" என்று கூறுவதை நாம் கவனிப்பது அவசியம். அப்படி அவர் வெற்றி கரமாக முடிப்பதற்கு உதவி செய்த மூன்று காரியங்களைத்தான் பிலி. 3:13,14 வசனங்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, நாமும் நம்முடைய பக்தி வாழ்க்கையில் பரம அழைப்புக்கான பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ள வேண்டு மானால், பவுலடியார் காட்டியுள்ள மாதிரியின்படி அந்த மூன்று காரியங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்வது அவசிய மாகிறது. அவைகளை நாம் ஒவ்வொன்றாக இப்பொழுது கவனிப்போம்.

## I. பின்னானவைகளை மறக்க வேண்டும்

பரம அழைப்புக்கான பந்தயப் பொருளைப் பவுலடியார் போல பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய முதலாவது காரியம், பின்னானவைகளை மறக்க வேண்டும் என்பது.

பின்னானவைகளை மறக்க வேண்டுமென்பதின் பொருள், வாழ்க்கையில் நடந்த சகலவற்றையும் மறந்துவிட வேண்டும் என்ப தல்ல. இந்தப் பொருளில் பவுலடியார் பின்னானவைகளை மறவுங்கள் என்று கூறவில்லை. எப்படியெனில், பவுலடியாரே இதே மூன்றாம் அதிகாரத்தின் முற்பகுதியில், தான் ஒரு பக்தி யுள்ள யூதனாக இருந்தபோது தனக்குப் பெருமையாக இருந்த வைகள் என்று ஒரு பட்டியலைக் கொடுக்கிறார். " நான் எட்டாம் நாளில் விருத்த சேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பெயன்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப் பிரமாணத்தின்படி பரிசேயன், பக்தி வைராக்கியத்தின் படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப் பிரமாணத்திற் குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்" என்று (பிலி. 3:4-6). ஆகவே, பொருள் அதுவல்ல.

மாறாக, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு ஒருவன் தன்னை ஒப்புக்கொடுத்து, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் (அப். 22:16) பெற்றுக்கொண்ட பிறகு, பழைய வாழ்க்கையை மறக்க வேண்டுமென்பதே. தேவனுக்கும், தேவ சித்தத்துக்கும், கிறிஸ்துவுக்கும், அவருடைய உபதேசத்துக்கும் விரோதமாக நடந்து கொண்ட வாழ்க்கையை முற்றிலும் மறக்க வேண்டுமென்றே கூறுகிறார். ஏனெனில், " இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின " (2 கொரி. 5:17) என்று கொரிந்தியர் நிருபம் போதிக்கிறது. இன்னும், ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தின் மேன்மை மற்றும் அதன் அழகு பற்றி பவுலடியார் ரோமாபுரியாருக்கு எழுதும்போது எவ்வளவு நேர்த்தியாக எடுத்துரைக்கிறார் பாருங்கள். "...ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே" (ரோமர். 6:4-7). இங்கே பாருங்கள், கிறிஸ்துவின் உபதேசப்படி ஞானஸ்நானம் பெற்ற ஒருவன் பாவத்துக்கு ஊழியஞ் செய்யக்கூடாது என்று கூறுகிறார். ஏனெனில், பழைய மனிதன் கிறிஸ்துவுடன் கூட சிலுவையில் அறையப்பட்டாயிற்று. ஆகவே, மரித்தவன் பாவம் செய்ய முடியாது என்கிறார்.

வேத வசனங்கள் பழைய பாவ வாழ்க்கை பற்றி இவ்வளவு தெளிவாகக் கூறி, அதை மறக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறும்போது, நம்மில் எத்தனை பேர் பழைய பாவ வாழ்க்கையை மறந்து நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோம்? சொல்லுங்கள். கிறிஸ்துவின் உபதேசப்படி, அவருடைய இரத்தத்தாலே கழுவப்பட்டேன் என்று சொல்லிக் கொள்ளுகிற ஒவ்வொருவரும் *பாவத்தைத் தள்ளி விட்டு*, இயேசுவை நோக்கி ஓட வேண்டு மென்றுதானே எபிரெயர் ஆசிரியரும் கூறுகிறார். "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிற வரும் , முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் என்று (எபி. 12:1) இயேசுவை நோக்கியும், இயேசுவோடும் ஓட விரும்பும் ஒருவன் பாவத்தைத் தள்ளி விட்டுத்தான் ஓட வேண்டும். பாவத்தோடு ஒருவன் இயேசுவை நோக்கி ஓடவே முடியாது.

பவுலடியார், பின்னானவைகளை மறக்கிறேன் என்று ஆவியானவரின் துணையோடு எழுதின போது, ஒருவேளை அவர் பல காரியங்களை மனதில் கொண்டிருந்தாலும், கிறிஸ்து வுக்கு விரோதமானவைகள் தான் அவைகளில் பிரதானமாக இருந்திருக்கும். ஏனெனில், பாவம் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்து வின் சிலுவைக்கும், கிறிஸ்துவின் உபதேசத்துக்கும், கிறிஸ்துவின் சபைக்கும் விரோதமானது. ஒருவனை இப்பூமியின் வாழ்க்கையில் சீரழித்து, நித்திய நரகத்தில் தள்ளும் பாவத்தின் வஞ்சனையி லிருந்து மனிதன் விடுதலையாக்கும்படியாகவே, "மனந் திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று பிரசங்கம் செய்தார். எல்லோரும் பாவத்திலிருந்து விடுதலை யாகும்படியாகத்தான் எல்லோருடைய பாவங்களையும் "தம் மேல்" சுமந்து சிலுவையில் மரித்தார்.

ஆகையால், அருமையானவர்களே! கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி வாழ்கிறேன் என்று சொல்லிக் கொள்ளு கிற ஒவ்வொருவரும் பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்ளும்படியாக முன்னான பாவ வாழ்க்கைக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

## II. முன்னானவைகளை நாட வேண்டும்

பரம அழைப்புக்கான பந்தயப் பொருளை பவுலடியார் போல, பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய இரண்டாவது காரியம், முன்னானவைகளை நாட வேண்டும் என்பது.

பின்னான பாவ வாழ்க்கையை மறக்க வேண்டுமென்று கூறும் பவுலடியார், அத்தோடு ஒருவன் நிறுத்திக் கொள்ளாமல், முன்னானவைகளை நாட வேண்டுமென்று எடுத்துரைக்கிறார். எதற்காக முன்னானவைகளை நாட வேண்டுமாம்? பரம அழைப்பின் பந்தயப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக. அந்தப் பரம அழைப்பின் பந்தயப் பொருள் ஒருவனுக்கு எங்கே கிடைக்கும்? எப்பொழுது கிடைக்கும்? கிறிஸ்தவ ஓட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் போது அது பரலோகத்தில் கிடைக்கும். அப்படித்தானே!

ஆக, பவுலடியாரின் கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் இந்தப்பரலோகம் தான் இருந்துள்ளது. ஆகவே தான், முன்னான வைகளை நாடுகிறேன் என்று கூறுகிறார். பிலிப்பியர் மூன்றாம் அதிகாரத்தின் கீழ்ப்பகுதிக்கு வரும்போது, பவுலடியார் இக் கருத்தை இன்னும் ஆழமாக வலியுறுத்துகிறார். " நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தரா யிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" என்று. (பிலி. 3:20). பிலிப்பியருக்கு மட்டுமல்ல, கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும்

போதும் பரலோகத்தை முதன்மைப் படுத்தியே பேசுகிறார்." பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கை வேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர் களாயிருக்கிறோம் " (II கொரி. 5:1,2). நம்முடைய பவுலடியார் ஓட்டத்தை முடித்து ஒரு வெற்றியான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்ததின் இரகசியம், அவருக்குள்ளாக எப்போதும் நித்திய வீடாகிய பரலோக சிந்தை இருந்தது தான். பரலோக சிந்தை இல்லாத ஒருவனால், கிறிஸ்தவனாக மாறவோ, ஓர் உண்மைக் கிறிஸ்தவனாக வாழவோ முடியாது. ஒருவேளை, அவன் தன்னை ஒரு கிறிஸ்தவனென்றும், ஊழியக்காரனென்றும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், பரலோகம் என்பது அப்படிப்பட்டவர் களுக்கு இல்லவே இல்லை.

அப்படியானால் அருமையானவர்களே, இக்கட்டுரையை வாசிக்கும் நம்மில் எத்தனை பேருக்குப் பரலோக சிந்தை உள்ளது? சிந்திப்போம். இங்கே, இன்னொன்றையும் சொல்லு கிறேன். பரலோகம் செல்வதற்குப் பரலோக சிந்தை மட்டும் போதாது. அதற்கேற்ற வாழ்க்கையும் மிகவும் முக்கியம். ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறப்பதாலோ அல்லது ஒரு கிறிஸ்தவப் பெயரைத் தரித்துக் கொள்வதாலோ அல்லது ஏதாவது ஒரு சபைக் கூட்டத்திற்குப் போவதாலோ ஒருவன் பரலோகம் சென்றுவிட முடியாது. அப்போஸ்தலன் யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட விசேஷ நூலில், இயேசுவானவர் "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன் " (வெளி. 3:21) என்று கூறியுள்ளார். ஆம், கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்குத் தான் பரலோக பாக்கியம். ஏமாந்து போய் விடக்கூடாது.

இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்குப் பரலோக பாக்கியம் தருவதாக வாக்களித்துள்ளார். இப்பூமியை விட்டுப் போவதற்கு சில நாட்கள் முன்பாக இவ்விதம் கூறியுள்ளார். "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில் லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளு வேன் " (யோவா. 14:2,3) இப்படி வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

ஆகையால், நம்முடைய வாழ்க்கையில் பந்தயப் பொருளா கிய பரலோக பாக்கியம் பெற பவுலடியார் போல முன்னானவை களை நாடுகிறவர்களாகவும், மேலானவைகளை நோக்குகிறவர் களாயுமிருப்போமாக!.

## III. இலக்கை நோக்கித் தொடர வேண்டும்

பரம அழைப்புக்கான பந்தயப் பொருளைப் பவுலடியார் போல பெற்றுக் கொள்வதற்குச் செய்ய வேண்டிய மூன்றாவது காரியம், இலக்கை நோக்கித் தொடர வேண்டும் என்பது.

பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடும் ஒருவன் தனக்காக் கொடுப்பட்டிருக்கும் இலக்கை ஒருபோதும் தவற விடக்கூடாது. இக்கருத்தை மையப்படுத்தித்தான் கிறிஸ்தவ வாழ்க்கையை ஓர் ஓட்டத்திற்கு ஒப்பிட்டு கொரிந்து பட்டணத் தாருக்கு பவுலடியார் எழுதியுள்ளார். " பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாம் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத் தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத் தக்கதாக ஓடுங்கள் பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம் " (1 கொரி. 9:42,25) என்று. ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்ளுகிறவர்களுக்கு ஓர் இலக்கு இருப்பது போல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் இலக்கு உண்டு. அந்த இலக்கிலே முழுக்கவனமும் இருக்க வேண்டும்.

பவுலடியார் அப்படிப்பட்ட கவனம் உடையவராகவே தன் பக்தி வாழ்க்கையில் இருந்துள்ளார். ஆகவே தான், " நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதி பதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் " (II தீமோ. 4:7,8) என்று அவரால் எழுத முடிந்தது.

வசனம் 14-ல் இலக்கைத் தொடருகிறேன் என்று கூறும் பவுலடியார், வசனம் 12-ல் "ஆசையாயத்" தொடருகிறேன் என்று கூறியுள்ளதை நாம் கவனிக்கத் தவறிவிடக்கூடாது. ஏனெனில், அவர் இலக்கை வெற்றிகரமாக அடைந்து நீதியின் கிரீடத்தைச் சொந்தமாக்கிக் கொண்டதற்கான இரகசியம் அவருக்குள்ளாக இருந்த இந்த ஆசை தான். தன்னுடைய பக்தி ஓட்டத்தை வெற்றி யில் முடிக்கும் போது, தான் என்றென்றும் கிறிஸ்துவுடனே கூட இருக்க முடியும் என்று அவர் திடமாய் நம்பியதால் தான் தனது பக்தி வாழ்க்கையை ஆசையாய் நடத்த முடிந்தது. இக்கருத்தை

அடிப்படையாகக் கொண்டு தான் பிலி. 1:23 வசனத்தை அவர் வடித்துள்ளார். "ஏனெனில், இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" என்று.

பவுலடியாரின் இந்த ஆசைக்குச் சவால் விடும் அநேக காரியங்கள் அவருடைய வாழ்க்கையில் எதிர் வந்தது. ஆனால், எதுவும் அவருக்குள்ளிருந்த அந்த ஆசையின் கூர்மையை மழுங்கடிக்க முடியவில்லை. II கொரி. 11ம் அதிகாரத்தில், கிறிஸ்தவ வாழ்க்கையில் அவர் எதிர்கொண்ட சவால்களை ஒரு பெரிய பட்டியலாகவே கொடுத்துள்ளார் (II கொரி. 11:23-28) இவைகளில் ஏதாவது சிலவற்றை எதிர்கொண்டிருந்தால் கூட, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் புறமுதுகு காட்டி, துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓட்டம் பிடித்திருப்போம். ஆனால், பவுலடியாரை இந்தப் பாடுகள் எதுவும் அசைக்கவில்லை, அசைக்க முடியவில்லை. " ஏனெனில், கிறிஸ்து எனக்கு ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம் " (பிலி. 1:21) என்பதில் மிகவும் உறுதியாயிருந்ததுதான்.

அருமையானவர்களே, அப்படியானால் பவுலடியாரின் இந்த உறுதிக்கு அடிப்படை என்ன? தான் கிறிஸ்துவுடனே கூட இருக்க வேண்டுமென்ற அவரது ஆசை தான். ஆம், அந்த ஆசை தான், அவர் இலக்கை நோக்கித் தொடர உந்தும் சக்தியாக இருந்துள்ளது. அந்த ஆசை தான், அவரை நீதியின் கிரீடத்திற்குச் சொந்தக்காரனாக இறுதியில் மாறியுள்ளது.

ஆகையால், நாமும் நம்முடைய பக்தி வாழ்க்கையில், பரம அழைப்பின் பந்தயப் பொருளை பெற்றுக் கொள்ள வேண்டுமானால், கிறிஸ்துவுடனே கூட இருக்க வேண்டுமென்ற தீராத ஆசையை வளர்த்துக் கொண்டு, இலக்கை நோக்கித் தொடருகிறவர்களாயிருப்போம்! ஆமென்.

## நன்றி! நன்றி!!

**கா**ங்கேயத்தில் கடந்த **அக்டோபர், 5,6-2011** ஆகிய தேதிகளில் நடைபெற்ற **14-ம் வேதாகம கருத்தரங்கிற்குத்** தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களிலிருந்து திரளாகப் பங்கு பெற்ற கர்த்தருடைய சபையார், "திருமறை ஆசான்" மாத இதழ் வாசகர்கள் மற்றும் "திருமறை தியானம்" தொலைக்காட்சி நிகழ்ச்சி நேயர்கள் ஆகிய ஒவ்வொருவருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

-ஆசிரியர்.

# தேவனிடத்தில் விசுவாசம்

**Bro. J.C. சோட்**

எபிரெயர் ஆசிரியர் சொல்லும் போது, " *விசுவாசமானது, நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது* " (எபி. 11:1) விசுவாசத்தை, நம்பிக்கை, நம்பப்படுவதின் உறுதி, தைரியம், ஏற்றுக்கொள்ளுதல் என்றும், கீழ்ப்படிதலை உண்டாக்கும் ஒன்று என்றும் சொல்லலாம். இந்த அடித்தளத்தின் மீதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை ஆரம்பமாகிறது. அதின் மீது தான் அது நிலை நிற்கிறது.

எபிரெய ஆசிரியர் சொல்லுகையில், "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் என்கிறார்* ". (எபி. 11:6) தேவனை விசுவாசிப்பதற்கு இரண்டு காரியங்கள் தேவையென்பதை நீங்கள் இங்கே கவனிக்க வேண்டும். முதலாவது, அவர் உண்டென்று ஒருவன் விசுவாசிக்க வேண்டும். இரண்டாவதாக, அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறவர் என்று நம்ப வேண்டும். அதற்கு குறைவான எந்த விசுவாசமும் ஏற்புடையதாக இருக்குமா?

நம்மை சுற்றி இருக்கும் காரியங்களை நாம் பார்த்து விட்டு பரலோகத்தின் தேவன் ஒருவர் உண்டென்று நம்பாமலிருப்பது எப்படி? வானம், பூமி, மிருகம், மனிதகுலம். இவை அனைத்துமே சிருஷ்டிகள் உண்டென்பதைத்தானே காட்டுகிறது. தாவீது சொல்லுகையில், " வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது " (சங். 19:1) " தேவன் இல்லையென்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்கிறான். அவர்கள் தங்களை கெடுத்து அருவருப்பான கிரியைகளை செய்து வருகிறார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" (சங். 14:1).

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசித்தால் மாத்திரம் போதாது, இயேசுக்கிறிஸ்து அவருடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் என கிறிஸ்து தாமே சொன்னார்; " *உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்*" (யோவான் 14:1) இன்னும், அநேக வசனங்கள் நமக்கு இதை வெளிப்படுத்துகிறது. கவனியுங்கள். " *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்* (யோவான்

3:16). " *அப்பொழுது, இயேசு சத்தமிட்டு, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்* " (யோவான் 12:44) என்றார்.

கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? வேதாகமம் இப்படிப்பட்டவர்களைக் குறித்தும் எழுதியிருக்கிறது. கிறிஸ்து சொல்லுகையில் "*உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்* " (யோவா. 3:18). குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை.

"*தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்*" (யோவா. 3:38). ஆகையால், "*நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்*" என்றார் (யோவான் 8:24).

நாம் கண்ட வசனத்தில், தேவனை விசுவாசித்தால் வரும் நன்மைகளை, ஆசீர்வாதங்களை பார்த்தோம். ஆனால், அதே சமயம், அப்படி நம்பாதவர்களுக்கு சாபங்களும், அய்யோக்களும், தண்டனைகளுமிருப்பதையும் நாம் கண்டிருக்கிறோம்.

ஆனால், தேவன் பேரிலும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் பேரிலும் நாம் எவ்வளவாக அன்பு வைக்க வேண்டும்? அவர்களை மனதளவில் ஏற்றுக்கொண்டால் போதுமா? தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய விசுவாசத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்கிறது. உதாரணமாக கிறிஸ்து சொல்கையில், " *என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?* " (லூக். 6:46). மீண்டும் அவர் வலியுறுத்துகையில், " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா?" என்பார்கள். " *அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்* " (மத். 7:21-23). இந்த ஜனங்கள் பக்தியுள்ளவர்கள் தான். அது மாத்திரமல்ல பக்திக்கான கிரியைகளும் செய்திருக்கிறார்கள். ஆனால், தவறு எங்கு நடந்தது? பரலோக பிதாவின் சித்தத்தின்படி அவர்கள் செயல்படவில்லை.

கர்த்தர் நம்மை என்ன செய்யச் சொல்கிறாரோ அதை செய்யுமளவிற்கு அவர் மீது நாம் விசுவாசம் வைக்க வேண்டும். ஆகையால் தான், "*விசுவாசம் மாத்திரம்*" நம்மை இரட்சிக்க முடியாது. அது செத்ததாக இருக்கிறது. யாக்கோபு எழுதுகை யில், " *அப்படியே விசுவாசமும், கிரியைகளில்லா திருந்தால் தன்னிலேதான் செத்ததாயிருக்கும்* " (யாக். 2:17) அவர் தொடர்ந்து சொல்கையில், "*ஆதலால், மனுஷன் விசுவாசத்தினா லே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறா னென்று நீங்கள் காண்கிறீர்களே*" (யாக். 2:24). இறுதியாக, "*அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது* " (யாக். 2:26) நாம் பார்த்த இந்த வசனங்களில் நம்மை இரட்சிப்பதற்கு "*விசுவாசம் மாத்திரம்*" போதாது என்று வலியுறுத்துகிறார்.

சில நேரங்களில் யோவான் 3:16ஐ சில போதகர்களும், பிரசங்கியார்களும் "விசுவாசம் மாத்திரம்" போதும் என்று நிரூபிக்க பயன்படுத்துவார்கள். ஆனால் கிறிஸ்துவே அங்கு விசுவாசம் மாத்திரம் போதும் என்று சொல்லவில்லை. மாறாக, விசுவாசித் தால் நாம் இழந்து போகாமல் நித்திய ஜீவனை அடைவோம் என்று தான் சொல்கிறார். கேள்வி யாதெனில், ஒருவன் தேவனையும், அவருடைய வார்த்தையையும் விசுவா சித்தால் என்ன செய்வான்? அவன் கர்த்தருக்கு கீழ்ப்படிவான், அதுதான் அவர் சொல்லுகிற கருத்து.

ஆம், *நாம் விசுவாசித்தால் நீதிமானாக்கப்படுகிறோம்* (ரோமர் 5:1). ஆனால், *விசுவாசத்தினால் மாத்திரமல்ல, கிருபை யினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுவோம்* (அப். 2:8,9). ஆனால், விசுவாசத்தினால் மாத்திரமல்ல.

இறுதியாக எபே. 4:5-ல் ஒரே விசுவாசம் உண்டென்று வேதம் சொல்கிறது. நமக்கு ஒரே வேதாகமம் உண்டு. நாம் அதை ஏற்றுக் கொண்டு விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படி கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்து கொள்கிறார். ஆமென்.

## கடல் நடுவே நீரூற்று

**யோபுவிடம் தேவன் இப்படிக் கேட்கிறார். "நீ சமுத்திரத்தின் அடித்தளங்கள் மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் (Springs) உலாவின துண்டோ?" [38:16] என்று.**

**உண்மையாகவே கடலுக்கடியில் நீரூற்று உண்டா? ஆம்! இதை முதன்முதலில் கண்டுபிடித்தவர் ரோமப் புவியியலாளர் ஸ்ட்ராபோ (63BC-21AD) என்பர். 1976ல் அமெரிக்க பூமியியல் ஆராய்ச்சியாளர்கள், அட்லாண்டிக் கடலோரத்தில், நியூ இங்கிலாந்திலிருந்து – ஜார்ஜியா வரை நல்ல தண்ணீர் உள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர்.**

## பெண்கள் பகுதி

# தாய்மார்களுக்கு ஒரு கடிதம்

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! கர்த்தருடைய கிருபையால் பெற்றோராகும் சிலாக்கியத்தை பெற்ற ஒவ்வொருவரும் நமக்கான பொறுப்புகள் என்னவென்பதை அறியாமல் இருப்பது நியாய மல்ல. வேதாகமம் சொல்லும் போதனைகளை எவ்வளவு முறை நாம் கேட்டிருந்தாலும் அதன்படி முழுமையாகச் செய்ய முடியாத பெற்றோராக வே நாம் காணப்படுகிறோம். நம்மிடத்தில் உள்ள விலை மதிக்க முடியாத உடைமை களில் பிரதான இடத்தைப் பெற்றிருக்கும் பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் சுதந்தி ரம் (சங். 127:3) என்று அறிந்தி ருக்கிறோம். பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக் கேற்ற சிட்சையிலும், போத னையிலும் வளர்ப்பது (எபே. 6:4) நம்முடைய நியாயமான, உண்மையான கடமை. "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, முதிர் வயதிலும் அவன் அதை விடாதிருப்பான்" (நீதி. 22:16). இவ்வாறு சொல்வோ மானால் அது நமக்கும் மரியா தையைக் கொடுக்கும், மேலாக, பரலோகத்தின் தேவ னும் மகிமைப்படுவார்.

எனவே, அருமையான சகோதரிகளே! அதற்கான சில காரியங்களைப் பார்ப்போம். வசன ஆதாரங்களுடன் ஆலோ சனைகள் இருப்பதால் தயவு செய்து வேதாகமத்தை கையிலே வைத்து அதைத் திறந்து படிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கி றேன்.

விசுவாசிகளுக்கு மாதிரி யாய் இரு (1தீமோ. 4:12) சிறு வயதிலிருந்தே அவர்களை சரி யாகப் பயிற்றுவிக்க ஆரம்பித்து விட வேண்டும் (2தீமோ. 3:15). குடும்பமாக தேவனை தொழுதுகொள்ள வேண்டும். தனியாக சபைக்கு அனுப்ப வேண்டாம் (எபி. 10:25).

அன்றாட குடும்ப ஜெபம் அவசியம். எல்லோரும் சேர்ந்து பாட்டுப்பாடி, வேதம் வாசித்து, ஜெபம் செய்வது அவசியம். (உபா. 6:6,7).

கடிந்து கொண்டு ஒழுங்கு படுத்த வேண்டும் (நீதி. 29: 15). தவறிலிருந்து அவனை திருத்தி காப்பாற்ற வேண்டும் (1 சாமு. 3:13).

சட்டங்களையும், அதிகா ரத்தையும் மதிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் (தீத்து 3:1) பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருக்க கற்றுக்கொடுக்க

வேண்டும் (உபா. 5:21). தன் கைகளினால் வேலை செய்து பிரயாசப்பட கற்றுக் கொடுக்க வேண்டும் (எபே. 4:28).

திருமணத்தை கனமுள்ளதாக எண்ணக் கற்றுக் கொடுக்க வேண்டும் (எபி. 13:4) காலம் முழுவதும் திருமணம் ஒப்பந்தம் காப்பாற்றப்பட வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம் (மத். 19:6). மாம்ச உறவில் தேவனின் அளவுகோலின்படி வாழ கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஞானத்தைத் தேட கற்றுக் கொடுக்க வேண்டும் (நீதி. 4:7) பள்ளிக்கூடம், ஆசிரியர்கள், படிக்கும் பாடங்கள் இவைகளில் ஆர்வம் காட்ட கற்றுக் கொடுக்க வேண்டும்.

அளவுக்கதிகமான சுதந்திரம், கேட்டவைகளை வாங்கிக் கொடுப்பது, கார், பைக் போன்றவைகளை பொறுப்பில்லாமல் எடுத்து சுற்றுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகளை கோபப் படுத்த வேண்டாம் (எபே. 6:4). அவர்களுடைய தேவை, பிரச்சினைகளை புரிந்து கொள்ளுங்கள். பிள்ளைகளுடைய நண்பர்களை கவனியுங்கள். எப்படிப்பட்ட மக்கள்? எங்கே போகிறார்கள்? வீட்டுக்கு எப்போது திரும்புகிறார்கள்? ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களை கெடுக்கும் (1 கொரி. 15:33). “இல்லை” என்று சொல்ல கற்றுக் கொடுங்கள்.

சரீரங்கள் பரிசுத்தமாயும், ஜீவபலியாகவும் ஒப்புக் கொடுக்கப் பட வேண்டிய ஒன்று (ரோமர் 12:1) புகைக்காதே என்று சொல்லிவிட்டு, பெற்றோரே அவ்வாறு செய்தால் அதற்கு மரியாதையே இருக்காது.

அநித்தியமான உலக சந்தோஷங்களை நடனம், சூதாட்டம், குடி, போதை வஸ்துக்கள் இவைகளை விட்டு ஓடி விட போதிக்க வேண்டும்.

உன் பிள்ளை எதைப் படிக்கிறாள், தொலைக்காட்சியில் எதைக் கவனிக்கிறாள் என்பதை கவனியுங்கள். பிரயோஜனமில்லாத இவைகளை தவிர்த்து, பிரயோஜனமுள்ளவைகளுக்கு மனதைத் திருப்ப வேண்டும்.

பொருள்களை சம்பாதிப்பதே வாழ்வில் முக்கிய பங்கு அல்ல என்பதை கற்றுக் கொடுக்க மறக்க வேண்டாம். அதை விட உண்மை, வைராக்கியம், தூய்மை, இரக்கம், உதவும் மனம் போன்றவையே தேவனுடைய பார்வையில் ஏற்புடையதாகும்.

கர்த்தருக்குப் பயந்து அவருடைய கற்பனைகளுக்கு பயப்பட கற்றுக் கொடுக்க வேண்டும். இது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை (பிர. 12:13).

பெற்றோர்களே, வேத வசனம் சொல்லும் ஆலோசனைகளை வாசிப்போம். பிள்ளை

களை மனப்பாடம் செய்ய சொல்லி கட்டாயப்படுத்துங்கள். இவைகளை கற்றுக் கொடுத்து விட்டால் அந்திய காலத்தில் நிம்மதியாய் வாழ முடியும். இல்லையேல் மன நோவுடன் தான் பெற்றோர் தம் இறுதி நாட்களைக் கழிக்க வேண்டி வரும்.

நம்மேல் அன்பு வைத்து சகல ஆலோசனைகளையும் கொடுத்திருக்கிற தேவாதி தேவனுக்கு நன்றி சொல்வோம். வேத வசனங்களை அற்பமாய் எண்ண வேண்டாம். நம் பிள்ளைகள் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தைத் தேட கற்றுக் கொடுப்போம் (மத். 6:33).

தாய்மார்களாகிய நாம் இந்த ஆலோசனைகளின்படி செய்ய சர்வ வல்ல தேவன் உதவி செய்வாராக! ஆமென் !!

## எது உங்களுக்கு முக்கியம்?

1. செல்லப் பிராணிகளான நாய் / பூனை போன்றவற்றிற்கு ஆகாரம் கொடுப்பதா? அல்லது
*உங்கள் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய ஆகாரம் அன்றாடம் கொடுப்பதா?*

2. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே பார்த்துக் கொண்டிருப்பதா? அல்லது
*வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் நேரத்தைச் செலவழிப்பதா?*

3. நாட்டு நடப்புகளையும், அரசியல் செய்திகளையும் பேசிக் கொண்டிருப்பதா? அல்லது
*யாராவது ஒருவருக்காகிலும் நற்செய்தியை அறிவிப்பதா?*

4. நண்பர்களோடு ஊர் சுற்றுவதா? அல்லது
*மனைவி, பிள்ளைகளோடு நேரத்தைச் செலவிடுவதா?*

5. புறம்பான மனிதனை அலங்கரிக்க நேரத்தைச் செலவிடுவதா அல்லது
*உள்ளான மனிதனை நாளுக்கு நாள் மேம்படுத்துவதா?*

# நிழலும், நிஜமும்

**Bro. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே,

**ஆ**ண்டவரும் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் திருமறை ஆசான் பத்திரிக்கை வாசகர்களாகிய உங்களுக்கு என்னுடைய ஸ்தோத்திரங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தப் பத்திரிக்கையில் வேதாகம கருத்துக்களின் அடிப்படையில் கட்டுரையை எழுதும்படி வாய்ப்பை உருவாக்கின தேவனுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் எழுதப்போகும் அல்லது விவரிக்கப் போகும் வேதாகம கருத்துக்களை நான் ஊழியம் செய்யும் பகுதியிலும், அநேக பிராந்திய சபைகளும் அதன் ஊழியக்காரர்களும் கொடுத்த வாய்ப்புக்கேற்ப அந்தப் பகுதிகளின் கூட்டங்களிலும் பேசியிருக்கிறேன்.

மேலும், காங்கயம் சபையார் நடத்தும் ஏலகிரி மலை வேனிற்கால வேதாகம முகாமிலும் பேனரைக் கொண்டு காட்சிப் படுத்தி விளக்கியிருக்கிறேன். இந்த தலைப்பின் செய்தியை முழுமையாகக் கேட்க வேண்டும் என்று பலர் தெரிவித்தார்கள். அவர்களின் ஆசை இந்த பத்திரிக்கையின் வாயிலாக நிறைவேறுவதற்காக கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைகிறேன்.

(குறிப்பு : இந்த வேதாகம கட்டுரையை வாசிக்க ஆரம்பிக்கும் முன்பு ஜெபம் பண்ணுங்கள். பிறகு உங்கள் முழு வேதாகமத்தை திறந்து வைத்துக் கொண்டு இந்தக் கட்டுரையை வாசியுங்கள். ஏனென்றால், இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது வேத வசனத்தை ஒப்பிட்டு புரிந்துக்கொள்ள அது ஏதுவாயிருக்கும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.)

## தலைப்பைப் பற்றி

நிழலும் நிஜமும் என்கிற தலைப்பில் நிழல் என்பது தேவனுடைய பாதுகாப்பு, அரவணைப்பு, போஷாக்கு என்கிற அர்த்தத்தோடு சொல்லப்படாமல் - நிழல் நிஜம் என்பது (பழையது - புதியது) அல்லது (மரணத்திற்கேதுவானது - ஜீவனுக்கேதுவானது) என்கிற விளக்கத்திற்கேதுவாக சொல்லப்பட்டுள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

## அப்போஸ்தலர் நடபடிகள் (15:1-33)

தேவனுடைய அநாதித் தீர்மானமாகிய - அவருடைய ஒரே பேறான குமாரர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் சபையாகிய

தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து விரிவுப்படுத்துகிற நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலே விவரிக்கப் பட்டுள்ளது. இதற்காக அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரம் வேதாகமத்திலே சிகரத்தைப்போல காணப்படுகிறது.

சபை ஸ்தாபிக்கப்பட்டு அநேக நாடுகளின் பட்டணங்களில் பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்ட அதே காலக்கட்டங்களில் யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர் கள் ஆனவர்கள் ஒரு வித்தியாசமான நம்பிக்கை கொண்டிருந் தனர். அந்த நம்பிக்கை என்னவென்றால், கிறிஸ்தவர்கள் மோசே யின் நியாயப்பிரமாணத்தையும் சேர்த்துக் கைக்கொள்ள வேண் டும் என்பதே. அவர்களுடைய இந்த நம்பிக்கை சரியானதா அல்லது தவறானதா என்பதை தீர்மானிக்கும் வேத வசனப் பகுதி அப்போஸ்தலர் நடபடிகளின் 15-ம் அதிகாரம்.

இன்றைக்கு உலகத்தில் நிலவிவரும் அநேக வித்தியாசமான உபதேசங்களுக்கு ஒரு தீர்வுகாணும் வசனப்பகுதியாக இந்த 15ம் அதிகாரம் உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின அநேக நிருபங்களிலே அவர் உறுதியாக, அதுவும் புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களான நம்மைப் போன்றவர்கள் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதை திட்டமாக எழுதுவதற்கு இந்த 15-ம் அதிகாரத்தின் நிகழ்ச்சி அல்லது விவாதக் கூட்டம் (Debate meeting) அடிப்படை யாக இருந்தது.

## அப்போஸ்தலர் 15-ம் அதிகாரத்தின் காலம்

கிறிஸ்துவின் பிறப்பை முதலாம் ஆண்டாகக் கணக்கிட்டு, கி.பி. 33ம் ஆண்டு வந்த பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக்கப்பட்டது என்கிற ஒரு காலண்டர். அதே நேரத்தில் கி.மு. 4 ஆண்டை கிறிஸ்துவின் பிறந்த ஆண்டாக கணக்கிட்டு, கி.பி. 30-ம் ஆண்டின் பெந்தெகொஸ்தே நாளில் சபை ஸ்தாபிக் கப்பட்டது (அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாம் அதிகாரம்) என்கிற இன்னொரு காலண்டர்.

இரண்டாவது காலண்டரின்படி பார்த்தால் கி.பி. 30-ல் சபை ஸ்தாபிக்கப்பட்டு, கி.பி. 31 அல்லது 32-ம் ஆண்டுகளில் அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்பட்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள், அப். 9:1-20; 22:3-16. அதன் பிறகு அவர் தமஸ்கு பட்டணத்திலிருந்து தப்பி அரபி தேசத்திற்கு போனதாகக் கலாத்தியருக்கு எழுதுகிறார், (அப். 9:21-25; கலாத். 1:16:17). மூன்று ஆண்டுகள் கழித்து எருசலேமுக்குப் போனார், (கலாத். 1:18-20; அப். 9:26-30). இந்த மூன்று ஆண்டுகளையும் சேர்த்தால் கி.பி. 35 ஆகிறது.

அதன்பின்பு பவுல் சீரியா நாட்டின் அந்தியோகியாவிலே தீர்க்கதரிசியாகவும், போதகராகவும் இருந்தார் என்று அப்போஸ் தலர் நடபடிகள் 13-ம் அதிகாரம் 1-ம் வசனம் கூறுகிறது. இந்த நிகழ்ச்சிகளின் தொடர்ச்சியாக அப்போஸ்தலனாகிய பவுலும்,

பர்னபாவும், மாற்கு என்கிற யோவானும் பரிசுத்த ஆவியானவரின் கட்டளைப்படி அந்தியோகியா சபையாரால் ஊழியத்திற்கு அனுப்பப்பட்டு, சீப்புரு தீவு மற்றும் ஆசியா மைனரில் ஊழியம் முடித்து அந்தியோகியாவுக்கு திரும்பினார்கள், மாற்கு பாதி வழியில் திரும்பி வந்துவிட்டார். இது அப்போஸ்தலனாகிய பவுலின் முதலாம் சுவிசேஷப் பயணம், (அப். 13:2-14:28).

இந்த நிகழ்ச்சிகள் 14 ஆண்டுகளாக நடந்தது. ஏனென்றால், பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது கலாத்தியர் 2:1ல் பதினாலு வருஷம் சென்றபின்பு, நான் தீத்துவைக் கூட்டிக்கொண்டு பர்னபாவுடனேகூட மறுபடியும் எருசலேமுக்குப் போனேன், என்று கூறுகிறார். ஆக, கி.பி. 35வுடன் 14 வருடங்கள் சேர்த்தால் கி.பி. 49 ஆகிறது. ஆகவே, அப்போஸ்தலர் 15-ம் அதிகாரத்தின் கூட்டம் கி.பி. 49-ல் நடந்தது. அதே ஆண்டில் தான் அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியா நாட்டிலிருந்த சபைகளுக்கு கலாத்தியர் நிருபம் எழுதினார்.

அப்போஸ்தலனாகிய பவுலும், பர்னபாவும் ஆசியா மைனரில் (சின்ன ஆசியா என்பது இப்பொழுது இருக்கிற துருக்கி நாடு) ஊழியம் செய்து கொண்டு புறஜாதிகளை கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே கிறிஸ்தவர்களாக்கி சபைகளை ஸ்தாபித்து வந்த நிலையில் யூதமார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களான சகோதரர்கள் இவர்களுக்குப் பின்னாலே சென்று அப்போஸ்தலனாகிய பவுல் போதித்த கிறிஸ்துவைப் பற்றின போதனைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி தூஷித்தார்கள். மேலும் ஒரு கட்டத்தில் மோசமான தாக்குதல் நடத்தினார்கள். ஏனென்றால் அவர்கள் புதிய உபதேசத்தை ஏற்றுக் கொள்ளமுடியாத அளவிற்கு மோசேயின் மேலும் மோசேயினால் கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் மேலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள், (அப். 13:14,45; 14:19). இதே காரணத்திற்காக யூதர்கள் ஏற்கனவே ஸ்தேவானை கொலை செய்திருந்தார்கள், (அப். 6:11-14; 7:55-59.

பவுலும், பர்னபாவும் முதலாம் சுவிசேஷப் பயணத்தை முடித்து இவர்களை ஊழியத்திற்கு அனுப்பின சபையாகிய அந்தியோகியாவுக்கு திரும்பி வந்துவிட்டபிறகு, கிறிஸ்தவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் கைகொள்ள வேண்டும் என்று போதிக்கிற கூட்டத்தைச் சேர்ந்த சிலர் அந்தியோகியா சபைக்கு வந்து "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தச்சேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" (அப். 15:1).

" அதினாலே அவர்களுக்கும் பவுல், பனர்பா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும், மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்" (அப். 15:2) ஏன் அவர்கள் எருசலேமுக்கு போக தீர்மானித்தார்கள், அந்த கூட்டத்தின் முடிவு என்ன என்பதைப் பற்றி அடுத்த இதழில் கவனிப்போமாக!.

வாலிபர் பகுதி

# "வாலிபனே! எழுந்திரு"

Bro. K. சேகர்

திருமறை ஆசான் மாத இதழின் மதிப்புமிகு வாசகர்களாகிய வாலிப நெஞ்சங்களுக்கு வாழ்த்துக்கள் பல இயேசுவின் நாமத்தில்.....

லூக்கா : 7:14ல் "வாலிபனே எழுந்திரு" என்று இயேசு சொல்லுவதைக் கவனித்தால், அந்த வாலிபன் எப்படியோ, எதிலோ வீழ்ந்து கிடக்கிறான் அல்லது இருக்க வேண்டிய நிலையிலிருந்து தவறியிருக்கிறான். இங்கே இந்த வாலிபன் மரித்துப் போய் பாடையில் கிடக்கின்றான் என்பது தெரிகிறது. அவனைச் சுற்றிலும் துக்கமும், அழுகையும் நிறைந்து காணப்பட்டது. நமது ஆண்டவர் அவனை மரித்தோரிலிருந்து எழுப்பி வாலிபனே எழுந்திரு என்றார். நீ இன்னும் வாழ வேண்டியது உண்டு, நீ செய்ய வேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்று "வாலிபனே எழுந்திரு" உன் பயணத்தைத் தொடரும் தேவனுக்காய் எழும்பிப் பிரகாசி என்றே இயேசு அவனை எழுப்பினார். அன்பானவர்களே! இன்றைக்கும் அநேக வாலிபர்கள் இயேசுவைப் பெற்றிருந்தும், ஏதேதோ காரியத்தில் வீழ்ந்து கிடக்கின்றதைப் பார்க்கிறோம், கேட்கிறோம். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து "வாலிபனே எழுந்திரு" என்று இயேசு கூவும் சத்தம் கேட்போமா......

## இருளில் விழுந்தாய்

பொதுவாகவே, இருளில் நடந்தாலே தடுமாற்றம் தான் மனிதன் தடுமாறி (தடம் மாறி) விழுந்தால் விழுந்த இடத்திலிருந்து தான் எழுந்திருக்க முடியும். விழுந்த இடத்தை எழுந்து பார்ப்பதும் இயற்கையே. அத்தோடு எங்கே விழுந்தோம், எப்படி விழுந்தோம் எந்நிலையிலிருந்து விழுந்தோம் என்று யோசிக்க வேண்டியதும் அவசியம். ஒரு முறை ஒரு மதுபானக் கடையின் பின்புறம் சிலர் மது அருந்தி விட்டு விழுந்து கிடந்தனர். அவர்களுக்கு முன்பாக ஒரு வேனில் இப்படி எழுதப்பட்டிருந்தது.

**வீழ்வது வெட்கமல்ல**
**வீழ்ந்து கிடப்பதுதான் வெட்கம்**

அவர்கள் அவைகளைப் பார்த்துப் படித்தும் எழுந்திருக்க முடியாத நிலை. அவர்கள் தாங்கள் எங்கே விழுந்தோம் எந்நிலையில் விழுந்தோம், ஏன் இப்படிக் கிடக்கின்றோம் என்று யோசிக்க முடியாத நிலையில் அவர்கள் எப்படி தன்னிலையறிவது. மதுபானத்திற்குத் தங்களை அடிமைகளாய் விற்றுவிட்டனர்,

ஆனாலும், அவர்களுக்கு ஐயோ! (ஏசா. 5:11, நீதி. 23:29-31) சுரணையில்லாத அந்த நிலையிலிருந்து எப்போது எழுந்திருப்பது, வெட்கம், மானம் என்பவைகளை உணர்ந்து எப்போது அவர்கள் விழிப்பது. அன்பானவர்களே, மது என்பது பல்வேறு பாவங்களுக்கு அழைத்துச் செல்லும் ஒரு தீய வழிகாட்டி. இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்களும் தங்கள் இருதயத்தை இதுபோன்ற சந்தோஷத்தில் நிரப்பிக் கொள்ளுகின்றனர். ஒருவேளை நீயும் அறியாமல் இந்தக் காரிருளில் சிக்கித் தவிப்பாயானால், உன்னை பரிசுத்தம் செய்த இயேசுவின் மாசற்ற இரத்தத்தை எண்ணிப்பார். உலகத்தின் அசுத்தத்தினின்று விடுவிக்கப்பட்டதை எண்ணிப்பார். உன்னைப் பார்த்து "வாலிபனே எழுந்திரு" என்று இயேசு அழைக்கிறார்.

**வெளிச்சத்தில் எழுந்திரு.**

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். (மத். 4:15) அது சாதாரண இருள் அல்ல. மரண இருள், வெளிச்சம் நீ விழுந்த இடத்தை அடையாளம் காண்பிக்கிறது. பொதுவாக, மனிதன் வெளிச்சத்தைக் கண்டாலே சந்தோஷப்படுகிறான். ஆனால், பாவ இருளில் இருக்கிறவர்கள் நீதியின் வெளிச்சத்தைக் காண விரும்புவதில்லை. கண்டும் ஒதுங்கி விடுகின்றனர். காரணம், ஒளி இருளைக் கடிந்து கொள்ளுகிறது. அவர்கள் வெளிச்சத்தில் தங்கள் வாழ்வை பிரகாசிப்பிக்க நினைப்பதில்லை. ஏனெனில், "பாவம் சில சந்தோஷங்களை சரீரத்தை மகிழ்விக்கும் சிற்றின் பங்களைக் கொடுக்கிறபடியினால், அதை விட்டுப் பிரிய மனமின்றி ஒளியைப் பகைக்கின்றனர்". (யோவான் 3:19-21) பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான்.

பிரியமானவர்களே, இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய இராஜ்யத்தில் இருக்கிறோம் (கொலோ. 1:13) " நாம் வெளிச்சத்தில் இருக்கிறோம் என்று சொல்லியும் பாவத்திலிருந்தால் தேவக்கோபம் நம்மேல் வரும் என்றறிந்து நாம் வெளிச்சத்திலே வேஷம் போடுகிறவர்களாயிராமல் இருளிலே பிரகாசிக்கின்றவர்களாக இருக்க வேண்டும். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறார் " (1 தெச. 4:7).

**முடிவுரை :**

அன்பானவர்களே! எழும்பிப் பிரகாசி உன் ஒளி வந்தது (ஏசா. 60:1) தூங்குகிற நீ விழித்து மரித்தோரை விட்டு எழுந்திரு அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்; (எபேசி. 5:12-14) "வாலிபனே எழுந்திரு" தேவனுக்காய்ப் போராடு.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!.

சிறுவர் பகுதி

# என்றும் அழியாத ராஜ்ஜியம்

BOR. ABEL R. NAYAGAM

சிறு பிள்ளையாகிய உங்களை மீண்டும் சிறுவர் பகுதியின் மூலமாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் தொடர்ந்து இந்தப் பகுதியைப் படித்து பயனடைந்து வருவீர்கள் என நம்புகிறேன். இந்த மாதம் நான் உங்களோடு கூட சேர்ந்து கிறிஸ்துவுக்குள்ளாக நம்முடைய நிலை இச்சிறுவயதில் எப்படி இருக்க வேண்டும் என அலசி பார்க்கப் போகிறோம்.

"போர்" அல்லது சண்டை என்று சொன்னாலே நமக்கு விறு விறுப்பும், ஆர்வமும் வந்து சேரும் அப்படித்தானே? நம்முடைய வேதத்தில் அநேக போர்களைப் பற்றி நாம் வாசித்திருப்போம். கேட்டுமிருப்போம். அப்படிப்பட்ட போர்கள் பற்றி வாசிக்கும் போது நாம் மகிழ்ச்சியடைகிறோம். அப்படித்தானே! அப்படி போர்கள் நடந்த நாட்கள் தான் வேதாகமத்தில் விறுவிறுப்பான காலம் என்று கூட நாம் சொல்லலாம். எப்பொழுதும் ஒரு போர் இருந்து கொண்டே தான் இருக்கிறது. பாருங்களேன்!... சவுல் ராஜா அமலேக்கியரோடே போர் செய்தான். மேலும் தாவீது பெலிஸ்தரோடும், சாலமோன் ராஜா தான் நாட்டின் எல்லையை காக்கும்படியாக போர் செய்தார்கள். இப்படி பல போர்களை நாம் வேதத்தில் காண்கிறோம். அப்படிப்பட்ட காலங்களை நாம் நினைப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது. அப்படித்தானே! நாம் யாருமே போர் நடக்கும் இடங்களில் வாழ்ந்ததில்லை. அந்த காலம் முடிந்தது...! நாம் அப்படி நினைப்பது சரியா? இல்லை. நாம் ஒரு ராஜ்ஜியத்தில் வாழ்ந்து வருகிறோம். அதிலே நாம் தினமும் போர் செய்து கொண்டிருக்கிறோம். இதை அறிவீர்களா? அறிந்து கொள்ளுங்கள்.

தீர்க்கதரிசிகளின் காலத்தில், தீர்க்கதரிசிகள் ஒரு சிலர் ராஜ்ஜியத்தை குறித்து முன்னுரைத்தனர். அவர்கள் அந்த ராஜ்ஜியத்தை பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் தெரியுமா? அது இந்த பூமியிலுள்ள எல்லா ராஜ்ஜியங்களை காட்டிலும் பெரியதும், வல்லமையுமான ஒரு ராஜ்ஜியம் என்றும் அது மற்ற ராஜ்ஜியங்களை போல் இல்லாதபடி, ஒரு ஆவிக்குரிய ராஜ்ஜியமாய் விளங்கும் என்றும் முன்னுரைத்தார்கள். சரி, அந்த தீர்க்கதரிசிகள் சொன்னதெல்லாம் நிறைவேறியதா? ஆம் அவை நிறைவேறின.

இயேசு பூமியில் இருந்த போது வரப்போகிற அந்த இராஜ்ஜியத்தை பற்றி அடிக்கடி பேசினார். அது வல்லமை

யோடே வரும் என்று தம் சீஷர்களுக்குக் கூறினார் (மாற். 9:11). அந்த வல்லமை பரிசுத்த ஆவியோடே வரும் (அப். 1:8) என்றும் கூறினார். நாம் அப்போஸ்தலரிலே படிக்கிறபடி அது பெந்தெகொஸ்தே நாளிலே வந்தது (அப். 2)

ஆக இயேசுவாலும், தீர்க்கதரிசிகளாலும் கூறப்பட்ட ராஜ்ஜியம் இன்னும் இருக்கிறது அது நாம் இப்பொழுது கூறுகின்ற "சபை"யே ஆகும். (தானி. 2:44)ல் சொன்னபடி அது அழியாத ஒரு ராஜ்ஜியம் ஆகும்.

சரி, இப்பொழுது நாம் பாடத்திற்கு வருவோம். நான் உங்களுக்கு முன்னே சொன்னேன் அல்லவா? நாம் போர் செய்கிறோமென்று, அதை நினைத்து கொள்ளுங்கள். இப்பொழுது பூமியில் இரண்டு ராஜ்ஜியங்கள் இருக்கின்றன. ஒன்று உண்மையையும், நல்லதையும் செய்யும் தேவனுடைய ராஜ்ஜியம். மற்றொன்று இருளையும், பொல்லாப்பையும் விரும்பும் பிசாசின் ராஜ்ஜியம். ஒளிக்கும், இருளுக்கும் உள்ள உறவை போல் முற்றிலும் அந்த இராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று வேறானவை. அவை இரண்டும் எப்போதும் போர் செய்து கொண்டே இருக்கின்றன. நீங்கள் உங்கள் நண்பர்களுக்கோ பிறருக்கோ இயேசுவைப் பற்றி கூறும் போது சாத்தானுக்குரிய இருளின் இராஜ்ஜியத்திற்கு எதிராய் போர் செய்கிறீர்கள். நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் படையிலே போர் வீரர்களாக இருக்கிறோமென்பதை மறந்து விடாதீர்கள். நீங்கள் இருளின் அதிகாரத்தை முறியடிக்கும்படி தேவன் உங்களை தேடுகிறார்.

நீங்கள் கடுமையாக உழைத்து அவருடைய சேனையில் நீங்கள் ஒரு வெற்றி வீரராக இருக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்.

சரி, எப்படி இதை செய்ய முடியும்! ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். இந்த சிறுவயதிலேயே தேவனுடைய சேவகராயிருக்கிற உங்களுக்கு அவர் எண்ணற்ற ஆசீர்வாதம் பொழிவார்.

நீங்கள் உங்கள் உறவினர்களோடும் விசேஷமாக பள்ளிகளில் நண்பர்களோடே இயேசுவைப் பற்றி கூறுங்கள். உங்கள் நல்நடத்தையின் மூலம் உங்கள் நண்பர்களை இயேசுவின் பக்கம் திருப்புங்கள். தேவனுக்கு பிரியமானதை செய்யுங்கள். இதைத்தானே தேவன் உங்களிடம் எதிர்பார்க்கிறார்.

நீங்கள் நல்ல மாணவர்களாகவும், தேவனுக்கு ஏற்ற போர் வீரர்களாகவும் இருப்பீர்களானால் அவர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார். ஏனென்றால், அவர் தான் சொல்லியிருக்கிறாரே சிறு பிள்ளைகள் என்னிடம் வர தடை பண்ணா தீர்கள் என்று!

கர்த்தருக்குச் சித்தமானால், உங்களை அடுத்த மாதம் சந்திக்கிறேன்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம் - 12. உபவாசம்

**Bro. K. பாஸ்கர்**

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. மீண்டுமாக இந்த தொடர்கட்டுரை மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. தொடர்ந்து பாடங்களை படித்து வருவதற்காக நான் தேவனை ஸ்தோத்தரிக் கிறேன். ஏனென்றால், நீங்கள் வசன ரீதியான கிறிஸ்துவின் சபை யை அடையாளம் கண்டு அதை ஏற்றுக் கொள்ளுவதற்காக! இம் மாதத்தில் மத வட்டாரங்களில் மிகவும் பிரபலமாயுள்ள உபவாசம் என்ற பாடத்தைப் படிப்போம்!.

### I உபவாசம் என்றால் என்ன?

உபவாசம் என்றால் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் இருப்பது. அதாவது, உணவு, தண்ணீர் எதுவும் சாப்பிடாமல் இருப்பது உபவாசமாகும். தேவனுடைய மனிதன் மோசே சீனாய் மலையில் பத்துக் கட்டளையான நியாயப் பிரமாணத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுவதற்காக அங்கே நாற்பது நாட்கள் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் இருந்தார் (யாத். 34:27,28) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்கு கொண்டு போகப்பட்டார். அப்பொழுது அவர் இரவும், பகலும் நாற்பது நாள் ஒன்றும் சாப்பிடாமலும், தண்ணீர் குடியாமலும் உபவாசமிருந்தார் (மத். 4:1,2, லூக். 4:12)

இஸ்ரவேலர், பாபிலோனிய சிறையிருப்பிற்குப் பின்பு தங்கள் பாவத்தினால் மனஸ்தாபப்பட்டு, அழுது உபவாசமிருந் தனர் (எஸ்றா 10:1-6). உபவாசம் என்பது அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் இருப்பதாகும். ஆனால், இன்று அநேகர் உபவாச நாளை அறிவிக்கின்றனர். அந்த நாளில் முழுவதுமாக உபவாசம் இருப்பது இல்லை. காலை முதல் மதியம் ஒரு மணி வரை உபவாசம் இருக்கின்றனர். அதை ஒருநாள் உபவாசம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கின்றனர். அதெல்லாம் உபவாசம் ஆகாது! அவர்கள் டிபன் மாத்திரம் சாப்பிடுவதில்லை! மற்றபடி தண்ணீர், மோர், ஜூஸ், இளநீர் போன்றவற்றை அருந்து கின்றனர். இதெல்லாம் உபவாசம் இல்லை! ஒரு நாளை உபவாச நாளாக அறிவித்து ஒருநாள் முழுவதுமாக இருப்பது உபவாச மாகும். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்குப் போய்

அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது தரித்திருந்து அன்று சாயங்கால மட்டும் உபவாசித்து கர்த்தருடைய சந்நிதியில் இருந்தார்கள் (நியா. 20:26).

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பரிசேயர் என்ற யூத சமயப் பிரிவினர் உபவாசத்தை புண்ணியச் செயலாகப் போதித்து வந்தனர்! ஆதலால், இயேசு கிறிஸ்து ஜெபத்தைக் குறித்த உவமையில் பரிசேயன் விரதத்தில் இரண்டு தரம் உபவாசிப்ப தாக கூறி ஜெபம் செய்தான். ஆயக்காரன் அப்படிச் செய்யாமல் தேவனே பாவியாகிய என் மேலே கிருபையிரும் என்றான் அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டான் என்றார் (லூக். 18:10-14) எனவே உபவாசம் என்பது தேவனுடைய பார்வையி லே புண்ணியமாகக் கருதப்படுவதில்லை. ஆதலால், அவர் பழைய ஏற்பாட்டிலும் மற்றும் புதிய ஏற்பாட்டிலும் அதற்கென்று விசேஷித்த கட்டளை எதுவும் கொடுக்கவில்லை. எனவே, உபவாசம் என்பது தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கை யில் தனிப்பட்ட முறையில் கைக்கொள்வதாகும். உபவாசம் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லை. மேலும், உபவாசத்தினால் யாரும் இரட்சிக்கப்படு வதில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தினார். அந்நாட்களில் அவரால் அநேக கிறிஸ்தவர்கள் சிதறடிக்கப்பட்டனர். (அப். 8:4) மேலும், அவர் கர்த்தருடைய சீஷர்களை பயமுறுத்திக் கொலை செய்வதற்காக தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு பிரயாண மாக போய்க் கொண்டிருந்தார். எருசலேமிலிருந்து, தமஸ்கு விற்கு போகும் வழியில் வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அப்போது அவர் இரட்சிக்கப்படவில்லை, அவன் தரையிலே விழுந்தான், அப்பொழுது இயேசு கிறிஸ்து சவுலே, சவுலே நீ என்னை துன்பப்படுத்துகிறாய் என்றார். அப்போதும் அவர் இரட்சிக்கப்படவில்லை மீண்டும் இரண்டாம் முறை இயேசு கிறிஸ்து பேசினார் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார் அப்போதும் அவர் இரட்சிக்கப்படவில்லை. மீண்டும் மூன்றாம் முறை இயேசு பவுலிடம் பேசினார். நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்று. அப்போதும் அவர் இரட்சிக் கப்படவில்லை! மேலும் பவுல் மூன்று நாள் பார்வையில்லாதவ னாய் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் உபவாச மிருந்தார். அப்போதும் அவர் இரட்சிக்கப்படவில்லை. அவர் அனனியா என்ற தேவ மனிதர் மூலமாய் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்ற பிறகே இரட்சிக்கப்பட்டார் (அப். 9:1-9,

அப். 22:16). எனவே, உபவாசம் என்பது மனிதனின் இரட்சிப்புக்காக தேவன் கொடுப்பதில்லை! மாறாக அது தேவனுடைய பிள்ளை களுடைய வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருக்கின்றது.

## II எது தேவனுடைய பார்வையில் உகந்த உபவாசம்?

மத வட்டாரங்களில் உபவாசம் என்பது சடங்காச்சாரமாக உள்ளது. தங்களின் பக்தியை வெளிப்படுத்தவே இது செய்யப் படுகின்றது. இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் பிரிவினைச் சபையைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளுபவர்கள் இப்படிப்பட்ட உபவாசத்தைச் செய்து வருகின்றனர். மனிதன் முகத்தைப் பார்க்கிறான் தேவன் இருதயத் தைப் பார்க்கிறார் (1சாமு. 16:7) உபவாச விசயத்தில் தேவன் ஆத்துமாவையும், சரீரத்தையும் பார்க்கின்றார். அதாவது, உபவாசிக்கும் போது ஆத்துமாவை ஒடுக்க வேண்டும். அதே சமயத்தில் இச்சயடக்கமும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து, ஏழை எளியோர்களை வீட்டிலே சேர்த்துக் கொண்டு அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து உபவாசிப்பது தேவனுடைய பார்வையில் உகந்த உபவாசமாக இருக்கிறது. ஆனால், இன்று மத வட்டாரங்களில் நடப்பது என்ன? காலை முதல் மதியம் வரை உபவாசிக்கிறார்கள். மதிய உணவை இச்சையடக்கமில்லாமல் இரண்டு வேளை உணவை ஒரே வேளையில் உண்ணுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் யாரா வது ஏழை, எளியோர் வந்தால் தங்களை ஒளித்துக் கொண்டு ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி அனுப்பி விடுகின்றனர். இதுவா உபவாசம்?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாளிலே பரிசேயர்கள் அப்படித்தான் உபவாசமிருந்தனர். அவர்களை இயேசு கடிந்து கொண்டார். அவர்கள் விளம்பரத்துக்காக தர்மம் கொடுப்பது, ஜெபம் செய்வது மற்றும் உபவாசம் இருப்பது (மத். 6:1-18). விளம்பரத்திற்காக சினிமாக்காரர்கள் செயல்படுவது போல இன்றைய நாட்களில் ஆவிக்குரிய உபவாச ஜெபக் கூட்டங்களை விளம்பரபடுத்தி நடத்துகின்றனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உபவாசத்தைக் குறித்து கூறுவதைக் கவனியுங் கள். முகவாடலாக இருக்கக்கூடாது, பார்வைக்காக வெளி வேஷமாக இருக்கக்கூடாது, மனுஷர் காணும்படி விளம்பரப் படுத்தக்கூடாது. தலைக்கு எண்ணெய் பூசாமல் சோகமாக இருக்க கூடாது, முகத்தைக் கழுவாமல் வாடலாக வைத்திருக்கக் கூடாது என்கிறார். உபவாசம் இருக்கும் போது முகத்தை கழுவி மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும், தலைக்கு எண்ணெய் பூசி யிருக்க வேண்டும். மனுஷருக்கு தெரியப்படுத்தாமல் இருக்க வேண்டும், அந்தரங்கத்தில் பிதா ஒருவருக்கே தெரிந்திருக்க வேண்டும். முக வாடலாக இல்லாமல் மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். இதுவே தேவனுடைய பார்வையிலே உகந்த உபவாச மாக உள்ளது (மத். 6:16-18).

உபவாசத்தால் ஆத்துமாவை தாழ்மைப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது (லேவி. 16:29,31) ஆவிக்குரிய விசயத்தில் பெருமைப்படக்கூடாது. பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (1பேதுரு 5:5) ஆனால் இன்று உபவாச ஜெபத்தால் பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றனர். பிரசங்கம் செய்வதில் பெருமை, பாட்டு பாடுவதுக் குறித்த பெருமை, சபையைக் குறித்த பெருமை போன்றவற்றை மனிதர்கள் மத்தியில் காணப் படுகின்றது. உபவாசம் தேவனுடைய பார்வையில் மட்டுமே இருக்க வேண்டும் தாழ்மையாக இருப்பதற்கு உபவாசம் ஒரு வழி நடத்துதலாக இருந்தது (சங். 35:13) இது ஆவிக்குரிய அளவில் இருக்க வேண்டும். அதுவே தேவனுடைய பார்வையிலே உபவாசமாக உள்ளது.

## III உபவாசத்தின் பலன்

உபவாசம் எந்த நோக்கத்திற்காகச் செய்யப்படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால் இயேசு கிறிஸ்து கூறிய படி உபவாசம் அந்தரங்கமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் தேவன் வெளியரங்கமாக பலன் அளிப்பார் (மத். 6:17,18) ஆனால், அநேகர் வெளியரங்கமாக உபவாசம் செய்வதையே விரும்புகிறார்கள். காரணம், மனுஷர் காண வேண் டும் என்று விரும்புகிறார்கள், மனுஷரால் வரும் புகழ்ச்சியை விரும்புகிற படியால் தேவனிடத்திலிருந்து எந்த பலனும் கிடைக்காது. உபவாசத்தின் நோக்கமும் நிறைவேறாது. இதனால் அவிசுவாசம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

உபவாசமோ மற்ற ஆவிக்குரிய காரியங்களளான புத்தக வெளியீட்டு விழா, பாடல் கேசட் வெளியீட்டு விழா என்று எதுவாக இருந்தாலும் மனுஷரால் கிடைக்கும் புகழ்ச்சிக்காகச் செய்தால் அவைகள் எல்லாம் தேவனுடைய பார்வையிலே வீணாக இருக்கின்றது. தேவனுடைய பிள்ளைகள் விளம்பரத்தை விரும்பக் கூடாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ மற்றும் ஆதி கிறிஸ்தவர்களோ மனுஷரால் வரும் புகழ்ச்சியை விரும்பவில்லை. வீண் புகழ்ச்சியை விரும்ப வில்லை (கலாத். 5:26) மனுஷரால் வரும் புகழ்ச்சி அவனுக்கு சோதனையாக உள்ளது (நீதி. 27:21) கர்த்தரால் புகழப்பட வேண்டும் (1கொரி. 10:18) அப்பொழுதுதான் நாம் செய்யும் ஆவிக்குரிய காரியங்களுக்கு பலன் கிடைக்கும்.

அந்தரங்கத்தில் செய்யப்படும் உபவாசத்திற்கு தேவனிடத் திலிருந்து வெளியரங்கமாக பலன் கிடைக்கும். எஸ்தர் நாட்களில் எஸ்தரும் யூத ஜனங்களும் மூன்று நாட்கள் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலும் உபவாசம் இருந்ததின் பலன் ஆகாஸ்வேரு ராஜா யூதர்களுக்கு விடுதலை கொடுத்து அவர்

களுக்கு நன்மை செய்தார் (எஸ்தர். 4:16) தேவன் ஆகாஸ்வேரு ராஜாவின் மூலமாக வெளியரங்கமாக நன்மை செய்தார் பலனளித்தார். நினிவே பட்டணத்தை நாற்பது நாளில் அழிக்கப் போவதாக தேவன் கூறினார். உடனே அவர்கள் அரசர் முதல் குடிமக்கள் வரை, ஆடு, மாடுகள் உட்பட உபவாசம் இருந்தனர் அவர்களின் மனந்திரும்புதலைப் பார்த்து நினிவே பட்டணத்தை அழிக்காமல் அவர்களைக் காப்பாற்றினார்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சுவிசேஷ ஊழியத்திற்காக சபையில் அனைவரும் உபவாசம் இருந்து அப்போஸ்தலனாகிய பவுலை அனுப்பினார்கள் (அப். 13:1-3) அதற்கான பலனை தேவன் கொடுத்தார். பவுல் மூன்று சுவிசேஷ பிரயாணங்களை மேற்கொண்டு அநேக கிறிஸ்துவின் சபையை பல பட்டணங் களில் ஸ்தாபித்தார். பவுல் யூதர்களால் தேர்ந்த பல இன்னல் களுக்கும், துன்பங்களுக்கும் விலக்கி அவர்களிடத்திலிருந்து உயிரைக் காப்பாற்றினார். கர்த்தர் பவுலுடன் இருந்தார். (2 தீமோ. 4:17-18).

இன்று நாம் ஊழியத்திற்காக உபவாசம் இருக்கும் பொழுது நமது ஊழியத்தின் பலனைக் கர்த்தர் கொடுத்து விளையச் செய்வார்.

(தொடரும்)

## நாளும், நடப்பும்

1. உள்ளாட்சி அமைப்புகள் அரசியல் மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.
2. தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் முத்தரப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் பயணம்.
3. கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரம் மத்திய, மாநில அரசுகளுக்குப் பெரும் சவாலாக மாறி வருகிறது.
4. வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி-18.
5. இந்தியாவில் கிளைகள் துவங்க அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு அழைப்பு - மத்திய அமைச்சர் கபில் சிபில்.
6. இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம்.

# துருவின் சாட்சி நூலில் இருந்து

## " கொடுத்தல் " திராவகப் பரிசோதனை போன்றது

### (சென்ற மாதத் தொடர்ச்சி)

**III யூதர்கள் தேவனை ஏன் வஞ்சித்தார் கள்?**

**ஏ**னெனில், தேவனில் அவர்கள் அன்பு கூரவில்லை. தேவன் தந்த ஆசீர்வாதங்களை அவர்கள் கண்கள் காணவில்லை. தேவ அன்பை உணரும் அறிவை இழந்தார்கள். அதினிமித்தம் அவரில் அன்பு கூருவதை நிறுத்தினபடியால், கொடுப்பதினால் வரும் மகிழ்ச்சியை இழந்தார்கள். அன்பு கொடுப்பதில் மகிழ்ச்சி கொள்ளும். கொடுக்க முடியாத சூழ்நிலை வரும்போது அது இருதயத்தை உடைக்கும். ஆனால், அன்பு சாகுமானால் எவ்வளவு குறைவாக வேண்டுமானாலும் கொடுக்க மனம் இடம் கொடுக்கும். அன்பு " நான் எவ்வளவு குறைவாகக் கொடுக்கலாம் என்று கேட்காது. மாறாக, எவ்வளவு அதிகமாகக் கொடுக்க முடியும்? என்றே கேட்கும்". மல்கியா தீர்க்கன் நாட்களில் இருந்த யூதர்கள், மந்தையின் தலையீற்றையும், பழுதற்ற ஆட்டுக்குட்டியையும் கொண்டு வராமல், ஊனமானதையும், நசல் பிடித்ததையும், ஆகாதவைகளையும் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் தேவனை கனப்படுத்தாமல் கனவீனப்படுத்தினார்கள். தேவன், அவர்களிடம், கண் ஊனமானதைப் பலியிடுகிறீர்களே, அது பொல்லாப்பில்லையா?" என்று கேட்டார். அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்டார். அதாவது, தேவன் மீது கொண்டிருந்த அன்பை அவர்கள் விட்டபடியால், ஒரு மனிதனுக்குச் செலுத்தத் துணியாததைக் கூட தேவனுக்குச் செலுத்தாத பட்சத்தில் அவர் அதை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

யெகோவா தேவன் தான் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் என்பதை ஒருவன் உணரும் போது, ஒருவன் தேவனுக்கு கொடுப்பது கடினமான காரியமல்ல. " பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள யாவும் கர்த்தருடையது". பூமியிலுள்ள எல்லாமே தேவனுக்குச் சொந்தமானது. அவர் தான் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். தேவன் தான் அனைத்திற்கும் சொந்தக்காரர் என்பதை ஒருவன் அங்கீகரிக்கும் போது, அவருக்குக் கொடுப்பது ஏன் அவ்வளவு கடினமாக இருக்க வேண்டும்? பொருளாசையை அறிக்கையிடுகிற எந்த ஒரு மனிதனையும் நான் அறிந்ததில்லை. நாம் குறிப்பிடப் பயப்படுகிற பாவம் இது என்று ஒருமுறை ஒருவர் சொன்னார்.

இப்பொழுது, தேவன் எல்லாவற்றுக்கும் சொந்தக்காரராக இருக்கிறபடியால், நாம்

சம்பாதிப்பதில் முதல் பங்கை அவருடைய ஊழியத்தைத் தாங்கக் கொடுக்க வேண்டும். பொருளாசையினிமித்தம் சில பேர் தேவனை வஞ்சிக்கிறார்கள். பொருளாசை ஒரு வஞ்சனையுள்ள பாவம். நம்முடைய பொருளாசை பற்றி நாம் அறியாமலிருப்பது மிகவும் சுலபம்.

புதிய ஏற்பாட்டில் மிக மோசமான பாவங்களுடன் பொருளாசை பட்டியலிடப் பட்டிருக்கிறது. ஆனாலும், "இவ்வுலகத்திலுள்ள விபச்சாரக்காரர், பொருளாசைக்காரர், கொள்ளைக்காரர், விக்கிரகாரதனைக்காரர் இவர்களோடு எவ்வளவும் கலந்திருக்கக் கூடாதென்று நான் எழுதவில்லை" (1கொரி. 5:10) மேலும், "பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங் கூடாது". (எபே. 5:3) " ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்" (கொலோ. 3:5).

## IV இன்றைக்கு மனிதர்கள் தேவனை எப்படி வஞ்சிக்கிறார்கள்?

இன்றைக்கு தேவனை வஞ்சிக்கும் வழிகளில் ஒன்று, காணிக்கைப் பையில் அல்லது பெட்டியில் போட வேண்டியதைப் போடாமலிருப்பது. கர்த்தருடைய நாளில், ஒருவர் தன் வருமானத்திலிருந்து நூறு ரூபாய் கொடுக்கத் திராணியுள்ளவராயிருந்து அவர் இருபது ரூபாய் மாத்திரம் போட்டால், அவர் எண்பது ரூபாயை தேவனிடமிருந்து திருடியிருக்கிறார் என்று பொருள். இவ்விதமாக, இன்றைக்கு பெரும்பாலோர், தேவனுக்கு கனத்தைக் கொடுக்கக் கூடிய அளவில் அவருக்குப் போய்ச் சேர வேண்டியதைத் திருடுகிறவர்களாக உள்ளார்கள். மல்கியாவின் நாட்களில் அவர்கள் செய்தது எப்படிக் கர்த்தருடைய பார்வையில் அசிங்கமாக இருந்ததோ அப்படியே இன்றைக்கும் அது அசிங்கமாகவே இருக்கும். இன்றைக்கு ஒருவர் " ஆமாம், நான் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காமலிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்". என்று சொல்வது பொதுவான ஒன்றாக உள்ளது. அதைப் பற்றி அவர் ஒன்றும் பெரிதாக நினைப்பதில்லை. சகோதரனே, ஒன்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன். நீங்கள் கொடுக்க வேண்டிய அவளவு கொடுக்காமலிருந்திருந்தால், உடனடியாக உங்களால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கத் தொடங்குவது நல்லது.

ஒரு மனிதர் ஞாயிறு பள்ளி வகுப்பில் உட்கார்ந்து கொண்டு "நான் சொல்ல வேண்டிய அளவுக்கு உண்மையைச் சொல்லவில்லை" என்பது எனக்குத் தெரியும் அல்லது "சத்தியத்துக்கு மாறாகப் பேசுவதிலிருந்து நான் என்னை விலக்கிக் கொள்ளவில்லை என்பது எனக்குத் தெரியும்" அல்லது விபச்சாரத்திலிருந்து நான் விலகியிருக்க வேண்டிய அளவுக்கு நான் விலகியிருக்கவில்லையென்பது எனக்குத் தெரியும் என்று சொல்லுபவர்

களும், இப்படிப்பட்டவர்களும் தேவனைப் பொறுத்தளவில் ஒரே ரகம் தான். காணிக்கையில் தேவனை வஞ்சிக்கும் இன்னொரு வழி காணிக்கைப் பையிலிருந்தோ, தட்டிலிருந்தோ, பெட்டியிலிருந்தோ எடுத்துக்கொள்வது. நான் ஒரு சமயம் ஒரு பட்டணத்தில் நடந்த உயிர் மீட்சிக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது சகோதரன் ஒருவர் வந்து "சகோதரர் பிளேக் அவர்களே, இங்கே ஒரு மோசமான செயல் நடந்து விட்டது" என்றார். அது என்ன என்று விசாரித்த போது, ஒரு சகோதரர் காணிக்கைப் பையிலிருந்து பணத்தைத் திருடிக் கொண்டார் என்பதை அறிந்தேன். என்னிடத்தில் சொன்னவர், இப்படிப்பட்ட செயல், இப்பொழுதுதான் முதல் முறையாக நடந்துள்ளது என்று எண்ணிக் கொண்டார். ஆனால், நான் சொன்னேன், இல்லை, இது முதல் தடவை அல்ல, உண்மையில் இது நாடெங்கும் நடந்து கொண்டுள்ளது என்றேன். அவர் நீங்கள் உண்மையைத்தான் சொல்லுகிறீர்களா என்றார். ஆம், சபையில் மிகவும் பரவலாக உள்ள பாவம் இது தான் என்று பதிலளித்தேன். பெரும்பாலானவர்கள், கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்காததினால் காணிக்கைப் பெட்டியில் தங்கள் பங்கைப் போடுவதற்கு முன்பாகவே திருடிக் கொள்ளுகிறார்கள். வேறு சிலர், தாங்கள் கொடுக்க வேண்டிய அளவு கொடுப்பது போல் பெட்டியில் போட்டு விட்டு, காணிக்கை எண்ணுவதற்கு உதவி செய்வது போல் பாசாங்கு காட்டிப் போட்டதை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த இரண்டு சாராருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. இரண்டு பேரும் திருடர்கள் தான்.

## V தேவனை வஞ்சிப்பதின் விளைவுகள்

" நீங்கள் ஒரு சாபத்தால் சபிக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்" நீங்கள் எனக்கு கொடுத்தால் நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினாலே என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று தேவன் சொன்னார். தாரளமாய்க் கொடுக்கிற வர்களைத் தேவன் ஆசீர்வதிப்பது நிச்சய மான ஒன்று. காணிக்கை கொடுக்க மறுப்பவர்களை அவர் சபிக்கிறார். ஒரு மனிதர் செய்யக்கூடிய மிகப் பெரிய தவறு தேவன் அவரை ஆசீர்வதித்த அளவுக்கு கொடுக்க மறுப்பது தான்.

தேவன் யூதர்களிடம், "இதினாலே என்னைச் சோதித்து பாருங்கள். நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்களை ஆசீர்வதிக்கமாட்டேனோவென்று கேட்கிறார்". நீங்கள் தேவனை சோதித்துப் பார்க்கத் தயாரா? ஒரு ஆறு மாதத்திற்காகிலும் சோதித்து, பிறகு பாருங்கள்.

**புதிய ஏற்பாட்டு கொடுத்தலைப் புதுப்பிக்க நீங்கள் உதவுவீர்கள்.**

கொடுக்க கூடிய சபை தான் வாழ்கிறது.

படைக்கக் கூடிய சபை தான் வளருகிறது.

தாராளமான சபை தான் பெருகுகிறது.

செலவழிக்கக் கூடிய சபை தான் ஜெயிக்கிறது.

இறுக்கிப் பிடிக்கும் சபை கண்ணீர் வடிக்கிறது.

# நீ அங்கே கன்மலையில் நில்லு...

**Bro. N. *பர்னபாஸ்***

அனுதினமும் ஆதரித்து இரட்சிப்பையும், ஈவுகளையும் உங்களுக்கு ஊக்கமாகவும் எங்கும் ஏற்றமிரக்கமில்லாமல் ஐக்கியப் பட்டவர்களுக்கும், ஒருமனப்பட்டவர்களுக்கும், அவ்விதமாகக் கொடுத்து கொண்டு இருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். "இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிக்கிறார் " என்ற இந்த வார்த்தையை கேட்காத மனுக்குலம் நிச்சயமாக இருக்க முடியாது. ஏனெனில், இன்றைக்கு உலகமெங்கும் அந்த வார்த்தை எந்த விதத்தில் அறிவிக்கப்படுகிறது என்பதை தான் நாம் கவனித்து பார்க்க வேண்டும்.

இன்றைய உலகிலும் நம்முடைய சமுதாயத்திலும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்ற போர்வையில் இருக்கும் கள்ள தீர்க்கதரிசி களுக்கு பஞ்சமில்லை. ஏனெனில், தங்கள் கள்ளத் தரிசனத்தின் மூலம் மக்களை ஏமாற்றிப் பிழைப்பை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களுடைய வார்த்தைக்கு இந்த ஜனங்களும் மதிமயங்கி செவி கொடுத்து நரகத்தை நோக்கி கைதட்டலோடும், ஆரவாரத்தோடும், உற்சாகத்தோடும் போய் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த கள்ள தீர்க்கதரிசிகள் அப்படி என்னதான் போதித்து இவர்களை விழவைத்து இருக்கிறார்கள் என்றால் சில கள்ள போதகராகிய ஊழியக்காரர்கள் "அனுதினமும் தேவன் எங்களுடைய வீட்டிற்கு வந்து ஊழிய ஆலோசனைகளை கொடுப்பார் என்றும், நாங்கள் தேவனிடத்தில் முகமுகமாய் பேசுவோம் என்றும், அற்புதங்களைச் செய்யும் சக்தியை தேவன் எங்கள் தலையில் கை களை வைத்து கொடுத்தார்" என்று பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்கள். இதை வாய்பிளந்து கேட்டுக் கொண்டு இருக்கும் ஜனங்கள் "இவர் மிகப்பெரிய பரிசுத்தவான்" இவர் சொல்வ தெல்லாம் உண்மையாகத்தான் இருக்கும் என்று பயத்தோடும் பக்தி யோடும் அந்த ஊழியருக்கு கொத்தடிமையாக மாறிப்போகிறார்கள்.

இப்படிப்பட்ட ஊழியர்கள் வேதாகமத்தில் இருக்கும் சங்கீத புஸ்தகத்தையும், நீதிமொழிகளையும் எடுத்து அதிலிருந்து அந்த ஜனங்களின் மனத்துக்கு பிரியமான வசனத்தை பேசி அந்த ஜனங்களை மகிழ்வித்து காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். சில சமயம் அந்த குறிப்பிட்ட கள்ளத் தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறித்துப் பேசுகின்ற போது கிறிஸ்துவை குறித்து ஜனங்கள் அழுகிறார்களோ இல்லையோ, அழுகையோடு பேசும் ஊழியரின் முகத்தை பார்த்து அழும் கூட்டங்கள் ஏராளம். இதற்கு என்ன காரணம் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் எழுது வதை கவனியுங்கள். "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர் களுடைய மனதை குருடாக்கினான் (II கொரி. 4:4) என்கிறார்.

இந்த கள்ள போதகர்கள் தேவனை பார்த்தேன் என்றும் அதினால் இரட்சிக்கப்பட்டேன் என்றும் மேடைக்கு மேடை ஏறி அலுப்பில்லாமல் சொல்கிறார்களே இதெல்லாம் உண்மையா என்று நம்முடைய வேத வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்கிறார் என்பதையும் நாம் கற்றுக்கொள்வோம்.

**நீ அங்கே கன்மலையில் நில்லு**

எகிப்து தேசத்தில் அடிமையாக இருந்த இஸ்ரவேல் ஜனங்களை தேவனுடைய பலத்த கரத்தினால் விடுதலை செய்து கானாவை நோக்கி அந்த திரளான ஜனங்களை வழி நடத்தி கொண்டு போனவன் தான் தேவதசானாகிய மோசே. இந்த மோசே வேதாகமத்தில் "தேவனுடைய சிநேகிதன்" என்றும், "தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான்" என்று "பூமியிலே சாந்த குணமுள்ள மனிதன்" என்று பல சிறப்பு அடைமொழிகளை பெற்றவன் தான் மோசே.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் இளைப்பாறிக் கொண்டு இருந்த போது இவன் தேவனுடைய அழைப்பிலே சீனாய் மலையில் ஏறி தேவ பிரமாணத்தை வாங்கி கொண்டு இருந்த நேரத்தில் தேவனி டத்தில் தனக்கென்று ஒரு விண்ணப்பத்தை வைத்தான். அது என்ன வென்றால், "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத். 33:18) என்றான்.

மோசேயிடம் தேவன் முட்செடியில் பேசினது முதல் சீனாய் மலையில் பேசினது வரைக்கும நாம் உற்று கவனித்தால் தேவனுடைய வார்த்தையை மாத்திரமே மோசே கேட்டான். அவருடைய உருவத்தையோ, மகிமையையோ அவன் பார்க்கவில்லை (யாத். 3:1-4, 19:19, 33:9, எண் 7:89) அது மாத்திரம் அல்ல அவன் அழைத்து வந்த இஸ்ரவேல் ஜனங்களும் தேவனுடைய வார்த்தை யை மாத்திரமே கேட்டார்கள் ஒரு ரூபத்தையும் அவர்கள் காண வில்லை (உபா. 4:32) என்று மோசே கூறுகிறார்.

இந்த நேரத்தில் தான் மோசே தேவனைப் பார்க்க வேண்டும் என்று தேவனிடத்தில் விண்ணப்பம் வைத்தான். அதற்கு தேவன் "நீ என் முகத்தை காணமாட்டாய் ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" (யாத். 33:20) என்றார். தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்ட பரிசுத்தவானாகிய மோசேயிடம் தேவன் என்னைப் பார்க்க முடியாது என்று திட்டவட்டமாகவே கூறுகின்றார். மோசேக்கே இந்த நிலை என்றால் இன்றைக்கு இருக்க கூடிய நம்முடைய நிலை என்ன? அல்லது போதகர்களின் நிலை தான் என்ன? யோசியுங்கள்! ஒருவேளை இன்றைய காலகட்டத்தில் தேவன் மனம்மாறி இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு தரிசனம் தருகின்றாரா? வசனத்தைப் பாருங்கள் பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனத்தும் நிறைவேற்றா திருப்பாரா? (எண். 23:19) என்கிறது. எனவே, அவர் சொன்ன வார்த்தையிலிருந்து ஒரு போதும் தவறமாட்டார்.

மோசேயிடம் தேவனுக்கு கிருபையும் இரக்கமும் இருந்தால் அவனிடத்தில் இதோ என்னன்டையில் ஒரு இடம் உண்டு நீ அங்கே கன்மலையில் நில்லு, என் மகிமை கடந்து போகும் போது நான் உன்னை அந்த கன்மலையில் வெடிப்பிலே வைத்து, நான் கடந்து போகு மட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன் பின்பு என் கரத்தை எடுப்பேன் அப்பொழுது என் பின்பக்கத்தைக் காண்பாய் என் முகமே காணப்படாது என்றார் (யாத். 33:20; 20:23).

கிறிஸ்துவுக்கு பிரியமானவர்களே! பரிசுத்தவானாகிய மோசே தேவனுடைய பின்புறத்தை மாத்திரம் பார்த்தான், அவருடைய முகத்தை பார்க்கவில்லை. ஆனால், இன்றைய கள்ள போதகர்கள் தங்களிடத்தில் தேவன் முகமுகமாய் பேசினார் என்று வாய் கூசாமல் பொய் சொல்கிறார்கள். ஒருவேளை நீங்கள் கேட்கலாம் புதிய ஏற்பாட்டில் தேவன் தரிசனம் கொடுக்கலாமே என்று. வசனம் சொல்வதை கவனியுங்கள். அத்தரிசனமான தேவன் (கொலோ. 1:15) அதரிசனமுமுள்ள ராஜன் (2 தீமோ. 1:17) அதரிசனமானவர் (எபி. 11:27) என்கிறது. அத்தோடு மாத்திரமல்ல தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும் போது மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக் கூடாதவருமாயிருக்கிறவர் (1தீமோத் 6:16) என்று அழுத்தம் திருத்தமாக எழுதுகிறார்.

இன்னமும் சில கள்ளப் போதகர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் பரலோகம் சென்று வந்ததாக அடுக்கடுக்கான கதைகளை எடுத்து விடுகிறார்கள். அதையும் மக்கள் ஆ வென்றுதான் கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பரலோக மைந்தன் இயேசு கிறிஸ்து இவர்களைக் குறித்து சொல்வதைக் கேளுங்கள். பரலோகத்திலிருந் திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனும் இல்லை (யோவா 3:13) என்று திட்டவட்டமாக கூறுகிறார். பரலோகம் போய் வந்தேன், தேவனை பார்த்தேன், ஒளி வந்து என் மீது விழுந்தது அதனால் இரட்சிக்கப்பட்டேன் என்று கூறும் அந்தி கிறிஸ்துவை நம்பாமல் வேத வசனங்களை நம்புங்கள். இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு பரமேறும் போது நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர் களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் (மத். 28:18-20) என்ற பிரதான கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு கொடுத்தார். ஆகையால், ஒருவன் வசனத்தை ஏற்றுக் கொள்வதினால் மாத்திரமே இரட்சிக்கப் பட முடியும்.

இனிமேல் இப்படிப்பட்ட கள்ள போதகர்களுக்கு நீங்கள் செவி கொடாமல் தேவனுக்குச் செவி கொடுங்கள் நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனை அறிக்கையிட்டு, பிதா குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் முழுக்குதல் ஞானஸ்நானத்தை பெறுங்கள். இதுவே தேவன் கொடுக்கும் இரட்சிப்பின் வழியாகும். இதுவே உங்களை மறுமையில் பரலோகத்தில் சேர்க்கும். இரட்சிக் கப்பட்ட பிறகு வேத வசனங்களின் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை பரிசுத்தமாக மாற்ற வேண்டும். அப்போதுதான் அந்த இரட்சிப்பு நிலைத்திருக்கும், அதற்கு தேவன் தாமே உங்களுக்கு உதவி செய்வராக ஆமென்!

# BIBLE MEDITATION

## TV PROGRAM

| | |
|---|---|
| TAMILAN TV - | Saturday 7.15 am. |
| POTHIGAI TV | Sunday 5.30 am. |
| TAMILAN TV - | Monday 7.00 am. |

**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


<u>பேச்சாளர்</u> : **சகோ. பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| பொதிகை | TV | சனி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

<u>பேச்சாளர்</u> : **சகோ. அர்ச்சுணன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |




**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள்



வேதாகம கருத்தரங்கில் திரண்டிருந்தவர்களில் ஒரு பகுதி



Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.